

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டக் கழகம் சார்பில் கங்கா நகரில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், எம்.ஜி.ஆர். பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு அறுசுவை உணவு (பிரியாணி) வழங்கினார். இந்நிகழ்வில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன், வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தி.நகரில் உள்ள ‘அன்னை உள்ளம்’ முதியோர் இல்லத்தில் மார்ச் மாதம் முழுவதும் காலை சிற்றுண்டிக்கான காசோலையை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. முன்வர் பாஷாவிடம் வழங்கினார். இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., ஜெ.ஜானகிராமன், எஸ்.ராமலிங்கம், ப.கண்ணன், மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் 71வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் 9வது மண்டல குழு தலைவர் எஸ். மதன் மோகன் எம்.சி. ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி 62அ வட்டத்தில் சிந்தாதிரிப்பேட்டை சிங்கன்ன தெரு குருவப்ப தெரு சந்திப்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை தெற்கில்

# கழகத் தலைவர் முதல்வர் பிறந்தநாள் - இன்றைய நிகழ்ச்சிகள்!

### மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

1. கருத்தரங்கம் நாள் : 4- 3- 2024, இடம்: எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட், கலைஞர்நகர், தலைப்பு : தமிழறிஞர்கள் அரங்கம், தலைமை: தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பங்கேற்போர் : திருவாரூர் ரெ.சண்முகவடிவேல், புலவர் மா.இராமலிங்கம், முனைவர் சுந்தரஆவுடையப்பன், திருவண்ணாமலை எழிலரசி. ஏற்பாடு : ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, சட்டமன்ற உறுப்பினர் - நெறியாளுகை : கவிஞர் இளையகம்பன்.

2. நாள் : 4-3-2024, 169வது வட்டம், வெங்கடாபுரம் சின்னமலை, நிகழ்ச்சி : பொதுக்கூட்டம், சிறப்புரை: உமா, திராவிட இயக்க தமிழர் பேரவை, தலைமை : துரை.சரவணன்.

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன்னணித் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

### வேலூர் - சத்துவாச்சாரியில் மார்ச் 6 - அன்று நடைபெறுகிறது!

# “கவிக்கோ” விருது விழா!

### கவிஞர் நெல்லை ஜெயந்தாவுக்கு - ‘கவிக்கோ விருது! வழங்கப்படுகிறது!

வேலூர், மார்ச் 4 -

வேலூரில், மார்ச் 6 அன்று நடைபெறும் ‘கவிக்கோ விருது விழா” வில் 2022 ஆம் ஆண்டுக்கான “கவிக்கோ விருது” கவிஞர் நெல்லை ஜெயந்தாவுக்கு வழங்கப்படுகிறது.

அதன் விபரம் வருமாறு:

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுக்கு 19.07.1998 அன்று சென்னை ராஜாஜி அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் நிகழ்ந்த மணிவிழாவின்போது அவருக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புத் தொகையிலிருந்து 22.01.1999 அன்று “கவிக்கோ அப்துல் ரகுமான் அறக்கட்டளை” நிறுவப்பட்டு 2014 ஆண்டு வரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிஞருக்கு விருதாக ரூ.30,000 வழங்கப்பட்டு வந்தது.

26.10.2015 மற்றும் 27.10.2015 ல் சென்னை காமராசர் அரங்கில் நடைபெற்ற “கவிக்கோ பவள விழா”வில் அவருக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புத் தொகை கவிக்கோ அப்துல் ரகுமான் அறக்கட்டளையில் சேர்க்கப்பட்டு, எதிர்வரும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும் கவிஞருக்கு ரூ.1,00,000 வழங்கப்படுவது என தீர்மானிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டுக்கான ‘கவிக்கோ விருது” நெல்லை ஜெயந்தாவுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட அளவில் ஆண்டுதோறும் மாணவர்களுக்கு கவிதைப் போட்டி நடத்தி தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த மாணவருக்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது.

இவ்விழா - 6.3.2024 - புதன்கிழமை மாலை 6.00 மணி அளவில் வேலூர் - சத்துவாச்சாரி - சோலை அரங்கில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு - ‘தமிழியக்கம்’ பொருளாளர் வே.பதுமனார் தலைமை வகிக்கிறார்.

கவிக்கோ அறக்கட்டளையின் பொருளாளர் வெ.சோலைநாதன் வரவேற்றுப் பேசுகிறார்.

டாக்டர் அ.அஜீம் - விருந்தினர்களுக்கு சிறப்புச் செய்கிறார். ஆ.மா.ஜெகதீசன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கவிக்கோ அவர்களின் ‘ஆலாபனை’ நூல் வெளியீடு நடைபெறுகிறது.

வீ.ஐ.டி. வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் நூலினை வெளியிட்டு, கவிக்கோ விருது, பட்டயம், பொற்கிழி வழங்குகிறார்.

பேராசிரியர் முனைவர் கு.வணங்காமுடி, மு.சுகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அ.அயாஸ் பாஷா நன்றி கூறுகிறார். தி.மு.அப்துல்காதர் பாராட்டுரை வழங்குகிறார்.

பேராசிரியர் - முனைவர் கி.பார்த்திபராஜா சிறப்புரையாற்றுகிறார்.

கவிஞர் நெல்லை ஜெயந்தா ஏற்புரையாற்றுகிறார்.

எஸ்.எஸ்.ஷாஜகான் நன்றி கூறுகிறார்.



கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின 71வது பிறந்தநாள் விழாவை கொண்டாடி மகிழும் விதமாக மாவட்ட செயலாளரும், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி நேற்று 3.3.2024 அடையாறில் பகுதி துணைச் செயலாளர் அ.ச.ஸ்ரீகாந்த் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழச்சியை தொடங்கி வைத்தார். உடன் பகுதிச் செயலாளர் துரைகபிலன், வேளச்சேரி மணிமாறன் எம்.சி., வட்டச் செயலாளர் ம.தமிழரசு, .சுரேஷ், பரிமேலழகன், பாலசுந்தரம், பாஸ்கர், வட்ட துணைச் செயலாளர் கவாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ.துரைசாமி
மார்ச் 4 (1978)



நாகை நகர செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மிசா காலத்தில் நாகை நகரமே வியக்கத்தக்க வகையில் “அண்ணா சிலை” அமைத்து தலைவர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் திறக்கச் செய்தவர்.

நாகை வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், நீலாயதாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




பவானி கிட்டு (எ) .சீ.கிருட்டினசாமி

23 -ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி
4.3.2024

பவானி கிட்டு (எ)
ப.சீ.கிருட்டினசாமி

முன்னாள் நகர கழக செயலாளர்,தலைமை செயற்குழு உறுப்பினர், பவானி நகர திமுக

சு.முத்துசாமி
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர்

என்.நல்லசிவம் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர்

மனைவி - K.ராஜம்மாள்

தம்பி - ப.சீ.நாகராசன் பவானி நகர கழக செயலாளர்

மனைவி - N.சந்திரா நாகராசன்

மகன் - K.செங்குட்டுவன் B.E., மருமகள் - S.ரங்கநாயகி B.sc.,

மகன்-N.இளங்கோ B.E., மருமகள் - E.சிந்தூரி B.E., /M.C.
பவானி நகர மன்ற தலைவர்

பேத்தி - S.வாசுகி B.Tech., மதிவாணன் USA,

பேரன்கள் - S.கிருஷ்ணராஜ், E.S.கிருத்திக், E.S.நித்விக்

இளைஞரணி மற்றும் சார்பு அணிகள்
பவானி நகர திமுக, ஈரோடு மாவட்டம்
உதயம் நண்பர்கள் குழு, பவானி